S.பிச்சையா ஆச்சாரி சன்ஸ்-ன்
ஸ்ரீ முருகன் ஜீவல்லரி மார்ட் A/C
தங்கம் ★ வெள்ளி ★ வைரம்
9443081168 8438442557 9994638971
நகை சேமிப்பிற்கு செய்கூலி, சேதாரம் கிடையாது.
Sri Murugan Jewellery Mart
உரிமையாளர்கள்
P.மணிகண்டன் B.Com., 78452 54592
P.பட்டு சங்கர் B.E., 99946 38971
41, மெயின் ரோடு, சங்கரன்கோவில்.
98945 71069


# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"


SPARES
2 WHEELER
SDK spare parts
HERO HONDA, TVS, BAJAJ, ROYAL ENFIELD, KTM, YAMAHA
ஒரிஜினல் ஸ்பேர்ஸ் கிடைக்கும்
No.3, மாஸ்டர் வீவர்ஸ் அசோசியேஷன் காம்ப்ளக்ஸ், சங்கரன்கோவில்
7540002331 / 9865147105

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 330 23.05.2026 SATURDAY VAIKASI : 9 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 330 23.05.2026 சனிக்கிழமை வைகாசி : 9 விலை : ரூ.5/–

## 10 மாநிலங்களை சேர்ந்த 24 மாநிலங்களவை எம்.பி. பதவிக்கு

# "ஜூன் 18ல் தேர்தல்!"

புதுடெல்லி: மே.23-

ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, குஜராத் உட்பட 10 மாநிலங்களில் காலியாக உள்ள 24 மாநிலங்களவை உறுப்பினர் பதவிக்கான தேர்தல் அடுத்த மாதம் 18ம் தேதி நடைபெற உள்ளதாக இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. மேலும், சி.வி. சண்முகம், சுனேத்ரா பவார் ஆகியோரின் ராஜினாமாவை அடுத்து தமிழ்நாடு, மகாராஷ்டிரா மாநிலங்களில் காலியாக உள்ள இரண்டு மாநிலங்களவை உறுப்பினர் பதவிகளுக்கான இடைத்தேர்தலும் இதே தேதியில் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆறு ஆண்டுகளைக் கொண்ட மாநிலங்களவை உறுப்பினர் பதவியை நிறைவு செய்தவர்களுக்கு மாற்றாக புதிய உறுப்பினர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்வு செய்யப்படுவது வழக்கம். அந்த வகையில், காங்கிரஸ்



தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, மதச்சார்பற்ற ஜனதா தளம் தலைவர் தேவகவுடா, மத்திய அமைச்சர்கள் ஜார்ஜ் குரியன், ரவ்னீத் சிங் உள்ளிட்ட 24 பேர் அடுத்த மாதம் தங்கள் பதவிக்காலத்தை நிறைவு செய்ய உள்ளனர். இதன் காரணமாக, புதிதாக 24 பேரை தேர்வு செய்வதற்கான தேர்தலை இந்திய தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, குஜராத் மாநிலங்களில் தலா 4 இடங்களுக்கும், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் தலா 3 இடங்களுக்கும், ஜார்க்கண்ட்டில் 2 இடங்களுக்கும், மணிப்பூர், மேகாலயா, அருணாச்சலப் பிரதேசம், மிசோரம் ஆகிய மாநிலங்களில் தலா ஒரு இடத்துக்கும் தேர்தல் நடைபெற உள்ளது. அதோடு, தமிழகத்தில் அதிமுக சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட சி.வி. சண்முகம் தனது மாநிலங்களவைப் பதவியை ராஜினாமா செய்ததாலும், மகாராஷ்டிராவின் துணை முதல்வர் சுனேத்ரா பவார் தனது மாநிலங்களவை உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்ததாலும் இவ்விரு மாநிலங்களிலும் காலியாக உள்ள இரண்டு உறுப்பினர் பதவிகளுக்கும் இடைத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இந்திய தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, தேர்தல் அறிவிக்கை ஜூன் 1ம் தேதி வெளியிடப்படும். அன்று தேர்தல் நடைமுறைகள் முறையாக தொடங்கும். வேட்புமனு தாக்கல் செய்வதற்கான கடைசி தேதி ஜூன் 8 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வாக்குப்பதிவு ஜூன் 18ம் தேதி காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும். அன்று மாலையில் வாக்கு எண்ணிக்கை தொடங்கும். நள்ளிரவுக்குள் இறுதி முடிவுகள் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சட்டவிரோத ஊடுருவல்காரர்கள் இந்தியாவிலிருந்து வெளியேற்றப்படுவார்கள்: அமித்ஷா உறுதி

புதுடில்லி: மே.23-

இந்தியாவுக்குள் சட்டவிரோதமாக ஊடுருவியவர்கள் ஒவ்வொருவரையும் கண்டறிந்து, வெளியேற்றப்படுவார்கள் என மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா கூறியுள்ளார்.



டில்லியில் நடந்த பிஎஸ்எப் நிகழ்ச்சியில் அமித்ஷா பேசியதாவது: செயற்கையாக மக்கள்தொகை எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக சட்டவிரோதமாக அகதிகள் ஊடுருவது நடக்கிறது. சட்டவிரோதமாக குடியேறியவர்கள் ஒவ்வொருவரையும் கண்டறிந்து வெளியேற்றுவோம்.

இந்தியாவின் சர்வதேச எல்லையில் 6 ஆயிரம் கிலோ மீட்டர் தூரத்துக்கு பாதுகாப்பு வேலி அமைக்கப்படும். அடுத்தாண்டுக்குள், ஸ்மார்ட் எல்லை திட்டத்தின் கீழ், பிஎஸ்எப் அமைப்புக்கு டிரோன், ரேடார்கள் மற்றும் திறன்வாய்ந்த கேமராக்கள் உள்ளிட்ட நவீன தொழில்நுட்ப வசதிகள் அளிக்கப்படும்

சட்டவிரோத ஊடுருவல் மற்றும் கால்நடைகள் கடத்தலை தடுக்க போலீசார், மாவட்ட கலெக்டர்கள் உடன் இணைந்து பிஎஸ்எப் அதிகாரிகள் பணியாற்ற வேண்டும்.

ஒரு பிரச்னையை கட்டுப்படுத்துவது என்பது மட்டும் பாதுகாப்பு கிடையாது. அதை வேரோடு அழிப்பதே உண்மையான அணுகுமுறை. ஊடுருவலை தடுக்க பிஎஸ்எப் இந்த நடைமுறையை பின்பற்ற வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்

## 8 தொகுதிகளை அள்ளிக் கொடுத்த மதுரைக்கு ஒரு அமைச்சர்தானா? தவெக தொண்டர்கள் சோர்வு

மதுரை: மே.23-

மதுரை மாவட்டத்தில் காலம், காலமாக ஆதிக்கம் செலுத்தி வந்த அதிமுக, திமுகவின் முக்கிய விஐபி வேட்பாளர் களைத் தோற்கடித்தோருக்கு தவெகவில் அமைச்சர் பதவி வழங்காதது எம்எல்ஏக்கள், நிர்வாகிகள், தொண்டர்கள் மத்தியில் வேதனையை ஏற்படுத்தி உள்ளது.

சட்டப்பேரவைத் தேர்தலில் மதுரை மாவட்டத்தில் உள்ள 10 தொகுதிகளில் யாரும் எதிர் பார்க்காத வகையில் தவெக 8 தொகுதிகளில் வென்றது.

அதிமுகவில் முன்னாள் அமைச்சர்கள் செல்லூர் ராஜூ, அமைப்புச் செயலாளர் வி.வி.ராஜன் செல்லப்பா, திமுகவில் முன்னாள் அமைச்சர்கள் பி.மூர்த்தி, பழனிவேல் தியாகராஜன் போன்ற முக்கிய வேட்பாளர்கள் உட்பட இக்கட்சி களைச் சேர்ந்தவர்களை தவெக வேட்பாளர்கள் தோற்கடித்து முதன்முறையாக எம்எல்ஏ ஆகினர்.

மதுரை மாவட்டத்தைவிட குறைவான தொகுதிகளில் வென்ற மற்ற மாவட்டங்களில் இரண்டு தவெக எம்எல்ஏக்கள், மூன்று தவெக எம்எல்ஏக்கள்



அமைச்சர்களாகி உள்ளனர். அதேநேரம் அதிமுக, திமுக மிக செல்வாக்குடன் இருந்த மதுரை மாவட்டத்தில் 8 தொகுதிகளில் தவெக வென்றும் அக்கட்சி எம்எல்ஏக்களுக்கு அமைச்சரவையில் போதிய பிரதி நிதித்தும் வழங்கப் படாததால், அக்கட்சியினர் வேதனை அடைந்துள்ளனர்.

இதுகுறித்து தவெகவினர் கூறியதாவது: மாவட்டத்தில் சிடிஆர்.நிர்மல்குமார் (தவெக), விஸ்வநாதன் (காங்கிரஸ்) ஆகியோர் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டிருந்தாலும் இருவருமே சென்னையில் வசிக்கக் கூடியவர்கள். நிர்மல்குமார் உசிலம்பட்டி பகுதியைச் சேர்ந்தவராக இருந்தாலும் பெரும்பாலும் சென்னையில்தான் இருப்பார்.

உள்ளூரைச் சேர்ந்த விஜய் ரசிகராக இருந்து, அவரது மக்கள் இயக்கத்தில் நிர்வாகியாகவும், மாவட்டச் செயலாளர்களாகவும் பணியாற்றி வெற்றிபெற்ற தவெக எம்எல்ஏக்களுக்கு அமைச்சரவையில் வாய்ப்பு வழங்கப்படவில்லை. மேலும் சிலர் வாய்ப்பை எதிர்பார்த்து ஏமாந்துள்ளனர்.

மதுரை மாவட்டத்தைவிட குறைவான தொகுதிகளைக் கொண்ட தூத்துக்குடி, விருதுநகர், ஈரோடு, நாமக்கல் போன்ற மாவட்டங்களுக்கு அமைச்சரவையில் கூடுதல் இடம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், மதுரை மாவட்டத்தில் 8 தொகுதிகளைக் கைப்பற்றியும், தவெகவில் ஒருவர் மட்டுமே அமைச்சராக்கப்பட்டுள்ளார். மற்றொரு அமைச்சர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்.

இக்கட்சி அமைச்சரவையில் இடம் பெறாமல் இருந்திருந்தால் மேலும் ஒருவருக்கு அமைச்சர் பதவி கிடைத்திருக்கும். மதுரை மாவட்டத்துக்குப் போதிய பிரதி நிதித்துவம் வழங்காததற்கு தவெகவின் உட்கட்சி பூசலும், மற்றவர்கள் அதிகாரத்துக்கு வந்துவிடக் கூடாது என்பதிலும் தவெகவைச் சேர்ந்த மேல்மட்ட அதிகாரப் புள்ளிகள் பார்த்துக் கொண்டதாகக் கூறப்படுகிறது.

அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த 10 தொகுதிகள் கொண்ட மதுரை மாவட்டத்தில் போதிய பிரதி நிதித்துவம் வழங்கப்படாததால் அக்கட்சியினரிடம் சோர்வை ஏற்படுத்தி உள்ளது. அடுத்தடுத்து நடக்கும் மாற்றங்களில் மதுரைக்கு முக்கியத்துவம் கிடைக்க வாய்ப்புள்ளது, என்றனர்.

## மதம் மாற்றப்பட்டு ஏமாற்றப்பட்ட பெண்ணுக்கு அநீதி; அத்துமீறிய போலீசுக்கு சரியான தண்டனை

சென்னை, மே.23-

மதம் மாற்றப்பட்டு ஏமாற்றப்பட்ட பெண்ணுக்கு அநீதி தாக்குதல் நடத்திய ராயபுரம் போலீஸ் இன்ஸ்பெக்டர் சிதம்பரம் பாரதி காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றம் செய்யப்பட்டார்.



கர்நாடகாவைச் சேர்ந்தவர் சுகன்யா, 33. இவர், 10 ஆண்டுகளுக்கு முன், சென்னைக்கு வந்து வடபழனியில் உள்ள பிரபல வணிக வளாகத்தில் உள்ள கடையில் பணிபுரிந்தார். அப்போது, அதே வணிக வளாகத்தில் மற்றொரு கடையில் பணிபுரிந்த சூளைமேடைச் சேர்ந்த சையது இப்ராஹிம், 33, என்பவருடன் சுகன்யாவிற்கு பழக்கம் ஏற்பட்டுள்ளது. இது நாளடைவில் காதலாக மாறியது.

அப்போது சையது இப்ராஹிம், நம் திருமணம் நடக்க வேண்டும் என்றால், ஹிந்து மதத்தில் இருந்து முஸ்லிமாக மாற வேண்டும் என, வற்புறுத்தி உள்ளார். இதையடுத்து எட்டு ஆண்டு காதலுக்காக, சுகன்யா மதம் மாறி, சபா மரியம் என பெயர் மாற்றிக் கொண்டார். இதனால், சுகன்யாவின் பெற்றோர் அவரிடம் பேசுவதை நிறுத்திவிட்டனர்.

இந்நிலையில், சையது இப்ராஹிம் சுகன்யாவிடம் பழகுவதை தவிர்த்து, ஏமாற்றி வந்துள்ளார். இதையறிந்த சுகன்யா, கடந்த 6ம் தேதி அரும்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இதை தொடர்ந்து, கடந்த 15ம் தேதி சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில், சுகன்யா புகார் அளித்தார். சையது இப்ராஹிமுக்கு, வேறொரு பெண்ணுடன் திருமணம் நடந்தது.

இதையறிந்த சுகன்யா, நண்பர்களுடன் அங்கு சென்று, தனக்கு நீதி வேண்டும், சையது இப்ராஹிம் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக்கோரி கல்யாண நிகழ்ச்சியின் வரவேற்பு மேடையில் போராட்டத்தில் ஈடுபட்டார். அப்போது சுகன்யாவிற்கு ஆதரவாக வந்த தோழியை, இன்ஸ்பெக்டர் சிதம்பர பாரதி தகாத வார்த்தையால் திட்டவே, அப்பெண் 'உன், காக்கி சட்டையை கழற்றாமல் விடமாட்டேன்' எனக் கூறினார்.

மேலும், தட்டிக்கேட்ட ஒருவருக்கு இன்ஸ்பெக்டர் சிதம்பர பாரதி குத்துவிட்டது சலசலப்பை ஏற்படுத்தியது. இந்த சம்பவத்தில் தற்போது அதிரடி நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. ராயபுரம் போலீஸ் இன்ஸ்பெக்டர் சிதம்பரம் பாரதி காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றம் செய்யப்பட்டார். இது அத்துமீறும் போலீசுக்கு சரியான தண்டனை என பலரும் கருத்து தெரிவித்துள்ளனர்.

## தவெக கூட்டணி ஆட்சி செயல்பாடுகளை பொறுத்திருந்து பார்ப்போம்: மதுரையில் வைகோ கருத்து

மதுரை, மே.23-

தமிழகத்தில் தவெக தலைமையிலான கூட்டணி ஆட்சியின் செயல்பாடுகளைப் பொறுத்து இருந்து பார்ப்போம் என மதிமுக பொதுச்செயலாளர் வைகோ கூறினார்.

மதிமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் அவர் தலைமையில் மதுரையில் நேற்று நடந்தது. முன்னாள் எம்எல்ஏ பூமிநாதன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். பின்னர் வைகோ செய்தியாளர்களிடம் கூறியதாவது: மத்திய அரசு திணிக்க முயற்சிக்கும் மும்மொழித் திட்டத்தை தமிழக அரசு தடுக்க வேண்டும். இதை அனுமதித்தால் மீண்டும் ஒரு மொழிப்போர் உருவாகும். ஆட்சியில் பங்கேற்க அழைத்ததால் காங்கிரஸ் பங்கேற்றுள்ளது. கூட்டாட்சி தத்துவத்துக்கு இடையூறு ஏற்படாமல் மாநில சுயாட்சியைப் பெறும் வகையில் அரசு செயல்பட வேண்டும்.

பாஜகவின் திட்டங்களை நுழைய விடாமல் மக்கள், தோல்வியைக் கொடுத்துள்ளனர். கூட்டணி ஆட்சி எப்படி இருக்கப் போகிறது என்பதைப் பொறுத்து இருந்து பார்ப்போம். 6 மாதம் அவகாசம் கொடுக்கலாம். அனுபவமின்றி இதுவரை அதிகாரம் பெறாமல் இருந்தவர்கள், ஆய்வு என்ற பெயரில் அரசின் நற்பெயரைக் கெடுத்தால் தடுக்க முதல்வர் முன்வரவேண்டும்.

கூட்டணி விவகாரத்தில் திருமாவளவனின் கருத்துக்கு நான் விளக்க உரை எழுதுபவன் அல்ல. கம்யூனிஸ்டுகள், விசிக எடுத்த முடிவு எல்லாம் அவர்களின் நிலைப்பாடு. மதிமுக வாக்கு வங்கி அப்படியே உள்ளது.

கடந்த 17 நாட்களில் தவெக சில நல்ல காரியங்களை செய்துள்ளது. திமுக தனது நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளது. ராமர் இருக்கும் இடமே அயோத்தி என்பது போல காங்கிரஸ் இருக்கும் இடம் மதசார்பின்மை என்பது சரியல்ல. மதவாதத்தை எதிர்க்க பல்வேறு கட்சிகளும் இருக்கின்றன.

திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர் மனதில் பட்டதைத் தெரிவிக்கிறார். உள்ளாட்சித் தேர்தல் குறித்து தற்போது பேச முடியாது. அதிமுக ஆட்சியமைக்க திமுக ஆதரவு என்ற பெருங்குழப்பம் சுற்றிக் கொண்டிருக்கிறது. இதைப் பற்றியெல்லாம் நான் கருத்துச் சொல்ல முடியாது. விஜய் என்னை சந்தித்த போது அவரது அமைச்சரவையில் இடம் பற்றி எதுவும் பேசவில்லை.

வாஜ்பாயின் மத்திய அமைச்சரவையில் எனக்கு பதவி கொடுத்தபோது மறுத்தவன். என்றைக்கும் அமைச்சர் பதவிக்கு ஆசைப்பட்டவன் நானல்ல. இனிமேலும் ஏற்படாது. இவ்வாறு வைகோ தெரிவித்தார்.

விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000

# மேகேதாட்டு அணை விவகாரம்: தவெக அரசின் நிலைப்பாட்டை விளக்க எடப்பாடி பழனிசாமி கோரிக்கை

சென்னை:மே,23-

மேகேதாட்டு அணை விவகாரத்தில் கர்நாடக காங்கிரஸ் அரசுக்கு எதிரான நடவடிக்கைகளை தவெக அரசு உடனடியாக எடுப்பதுடன், அரசின் தெளிவான நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும் என்று அதிமுக பொதுசெயலாளர் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.இது குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில்: "மேகேதாட்டு அணை கட்டுவதை எதிர்க்க தமிழகத்திற்கு உரிமை இல்லை" என்று கர்நாடக மாநில துணை முதல்வர் டி.கே. சிவக்குமார் தெரிவித்துள்ளார்.காவிரியில் தமிழகத்தின் உரிமையை மழுங்கடிக்கும் வகையில் கர்நாடக காங்கிரஸ் அரசு செயல்படுவதும், அதை தமிழகத்தில் உள்ள அரசு கைகட்டி வேடிக்கை பார்ப்பதும், ஆட்சி மாறினும் மாறாத காட்சியாகவே உள்ளது.



தமிழ்நாட்டை தற்போது ஆண்டுவரும் அரசு, காங்கிரஸ் தயவில் உள்ள தமிழக வெற்றிக் கழகம் பொய்க்கால் குதிரை அரசாக செயல்படுவதால், கர்நாடக காங்கிரஸ் கட்சியை எதிர்த்து "திடமான" நிலைப்பாடு எடுத்து பேச முடியுமா ? மேகேதாட்டில் பூமி பூஜை வரை பேசுவதற்கு கர்நாடக காங்கிரஸ் அரசுக்கு எங்கிருந்து தைரியம் வருகிறது ? தங்களால் ஆட்டுவிக்கப்படும் அரசு தான் தமிழ்நாட்டில் உள்ளது என்ற எண்ணமா ? காங்கிரஸ் தொடர்ந்து தமிழகத்திற்கு எதிராக செயல்படுவது கடும் கண்டனத்திற்குரியது.
காவிரி நதிநீர் என்பது தமிழ்நாட்டின் ஜீவாதாரம் ஆகும். டெல்டா உள்ளிட்ட பல மாவட்ட விவசாயிகள் மட்டுமின்றி 20 மாவட்ட மக்களின் குடிநீர் ஆதாரமாகவும் காவிரியாறு விளங்கி வருகிறது. மேகேதாட்டில், காவிரியின் குறுக்கே அணை கட்டினால் டெல்டா மாவட்டங்கள் பாலைவனமாகிவிடும். காவிரி தொடர்பாக தமிழகத்தின் உரிமை விட்டுக் கொடுக்கப்படுவதை அ.இ.அதிமுக ஒரு நாளும் அனுமதிக்காது.கர்நாடக துணை முதல்வரின் இப்பேச்சு தமிழக விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் இடையே மிகப் பெரிய கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. இவ்விவகாரத்தில் கர்நாடக காங்கிரஸ் அரசுக்கு எதிரான நடவடிக்கைகளை இந்த அரசு உடனடியாக எடுப்பதுடன், அரசின் தெளிவான நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்" என்று எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

# ஆந்திர கோயிலில் ரூ.1 கோடி வைர கிரீடம் மாயம்: இந்து அறநிலையத் துறை அதிகாரி விசாரணை

திருப்பதி:மே,23-

ஆந்திர மாநிலம் கிருஷ்ணா மாவட்டம், குடிவாடாவில் பிரசித்தி பெற்ற ஸ்ரீ கல்யாண வெங்கடேச பெருமாள் கோயில் உள்ளது. இது இந்து சமய அறநிலையத் துறையின் கீழ் செயல்படுகிறது.இந்நிலையில், கடந்தாண்டு ஜனவரி மாதத்தில், மாட்டூரி சுப்பாராவ் எனும் பக்தர், 461 கிராம் எடையில், வைர கிரீடத்தை சுவாமிக்கு காணிக்கை வழங்கினார். இதன் தற்போதைய மதிப்பு ரூ.1 கோடி என கூறப்படுகிறது. இந்நிலையில், சில நாட்களுக்கு முன் கோயிலுக்கு சென்ற மாட்டூரி சுப்பாராவ், சுவாமிக்கு



வைர கிரீடத்தை சூட்டி அழகு பார்க்க வேண்டும் என கூறியுள்ளார். ஆனால், அது வங்கி லாக்கரில் வைக்கப்பட்டுள்ளது என கோயில் நிர்வாகம் கூறியுள்ளது. ஒவ்வொரு முறையும் இதே பதிலை சொன்னதால் சந்தேகம் அடைந்த சுப்பாராவ் இந்து சமய அறநிலைத் துறையில் முறையிட்டுள்ளார். அதன் பேரில், நேற்று உதவி ஆய்வாளர் லலிதா கோயிலில் விசாரணை நடத்தினார். அப்போது அறங்காவலர் குழுவில் இடம்பெற்றுள்ள 31 பேரும் ஊரில் இல்லை என கூறியுள்ளனர்.எனவே, நன்கொடையாளரிடம் வைர கிரீடம் குறித்து தகவல்களை சேகரித்தார். தற்போது அந்த கிரீடம், கோயில் மராமத்து பணிகளுக்காக ஒரு அடகு கடையில் அடகு வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. ஆதலால், அந்த அடகு கடைக்காரருக்கும் தற்போது அடுத்த விசாரணைக்கு ஆஜர் ஆக வேண்டுமென நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் ஜூன் 18ல் மாநிலங்களவை இடைத்தேர்தல்: தேர்தல் ஆணையம் அறிவிப்பு

சென்னை:மே,23-

தமிழ்நாட்டில் காலியாகவுள்ள ஒரு மாநிலங்களவை இடத்துக்கான இடைத்தேர்தல் ஜூன் 18 ஆம் தேதி நடைபெறும் என்று இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.அண்மையில் நடந்து முடிந்த தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக சார்பில் மயிலம் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற சி.வி.சண்முகம், தனது மாநிலங்களவை உறுப்பினர் பதவியை முறைப்படி ராஜினாமா செய்தார்.இந்த நிலையில், தமிழ்நாட்டின் ஒரு மாநிலங்களவை உறுப்பினர் பதவி காலியானதாக அறிவிக்கப்பட்டது. இதையடுத்து, ஜூன் 18




ஆம் தேதி இடைத்தேர்தல் நடைபெறும். ஜூன் 1 ஆம் தேதி வேட்புமனுத் தாக்கல் தொடங்குகிறது. ஜூன் 11 வேட்புமனுவை திரும்பப் பெற கடைசி நாளாகும். ஒருவருக்கு மேல் போட்டியிடும் பட்சத்தில், ஜூன் 18 ஆம் தேதி வாக்குப்பதிவு நடத்தப்பட்டு, அன்று மாலையே முடிவுகள் அறிவிக்கப்படும் என்று இந்திய தேர்தல் ஆணையம் தெரிவிக்கப்பட்டுள்ளது.
நாடு முழுவதும் 10 மாநிலங்களில் உள்ள தற்போதைய உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவடைய இருப்பதால், 24 இடங்கள் காலியாகின்றன. அதோடு, மகாராஷ்டிராவிலும் மாநிலங்களவை பதவியை தேசியவாத காங்கிரஸ் தலைவர் சுனேத்ரா அஜித் பவார் ராஜினாமா செய்திருந்தார். இந்த காலியிடங்களுக்கும் ஜூன் 18 இடைத்தேர்தல் நடைபெற இருப்பது குறிப்பிடத்தக்கது.

# கோயில்களில் சிறப்பு கட்டண தரிசனத்துக்கு எதிராக வழக்கு: தமிழக அரசு பதிலளிக்க நீதிமன்றம் உத்தரவு

சென்னை::மே,23-

விஸ்வ இந்து பரிஷத் வட தமிழ்நாடு பிரிவு தலைவர் பி.சொக்கலிங்கம் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருப்பதாவது: தமிழகத்தில் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள கோயில்களில், கூட்ட நெரிசலை கட்டுப்படுத்த ரூ.500 வரை பணம் வசூலித்து, சிறப்பு கட்டண தரிசன முறை அமல்படுத்தப்பட்டுள்ளது.மூத்த குடிமக்கள், மாற்றுத் திறனாளிகள், கர்ப்பிணி பெண்கள், புதுமண தம்பதிகள், மாநில ஆளுநர்



கள், முதல்வர்கள், மடாதிபதிகள், ஜீயர்களை இலவச சிறப்பு தரிசனத்துக்கு அனுமதிக்கலாம். பணத்தின் அடிப்படையில் பாரபட்சம் காட்டும் சிறப்பு கட்டண தரிசன முறையை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கும்படி இந்து சமய அறநிலையத் துறைக்கு உத்தரவிட மனுவில் கோரியுள்ளார்.
வழக்கை விசாரித்த நீதிபதிகள் ஜி.ஆர்.சுவாமிநாதன், வி.லட்சுமி நாராயணன், மனுவுக்கு பதிலளிக்கும்படி தமிழக அரசுக்கு உத்தரவிட்டு, விசாரணையை மே 29ம் தேதிக்கு தள்ளி வைத்தனர்.

# அமைச்சர்களாக வன்னியரசு, ஷாஜஹான் பதவியேற்பு: நனவானது விசிகவின் 'ஆட்சி, அதிகாரத்தில் பங்கு' கனவு

சென்னை::மே,23-

முதல்வர் விஜய் தலைமையிலான அமைச்சரவையில், விசிகவின் வன்னியரசு, ஐயூஎம்எல் கட்சியின் ஷாஜஹானுக்கு அமைச்சர்களாக, ஆளுநர் ஆர்.வி.அர்லேகர் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். வன்னியரசு திண்டிவனம் தொகுதியிலும், ஷாஜஹான் பாபநாசம் தொகுதியில் வெற்றி பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களுக்கான இலாகா ஒதுக்கப்பட்டுள்ளது. ஐயூஎம்எல் கட்சியின் ஷாஜஹான் சிறுபான்மை நலத்துறை அமைச்சராகவும், விசிகவின் வன்னியரசு சமூகநீதித் துறை அமைச்சராகவும் நியமிக்கப்பட்டார்கள்.
முன்னதாக நேற்று (மே.21) ஸ்ரீநாத் (தூத்துக்குடி), கமலி.எஸ். (அவிநாசி), சி.விஜயலட்சுமி (குமாரபாளையம்), ஆர்.வி.ரஞ்சித்குமார் (காஞ்சிபுரம்), வினோத் (கும்பகோணம்), ராஜீவ் (திருவாடானை), பி.ராஜ்குமார் (கடலூர்),





வி.காந்திராஜ் (அரக்கோணம்), மதன் ராஜா.பி (ஓட்டப்பிடாரம்), ஜெகதீஸ்வரி.கே (ராஜபாளையம்), ராஜேஷ்குமார்.எஸ் (கிள்ளியூர்), எம்.விஜய் பாலாஜி (ஈரோடு கிழக்கு), லோகேஷ் தமிழ்செல்வன்.டி (ராசிபுரம்), விஜய் தமிழன் பார்த்திபன்.ஏ (சேலம் தெற்கு), ரமேஷ் (ஸ்ரீரங்கம்), பி.விஸ்வநாதன் (மேலூர்), குமார்.ஆர் (வேளச்சேரி), தென்னரசு.கே (பெரும்புதூர்), வி.சம்பத்குமார் (கோவை வடக்கு), முகமது பர்வேஸ் (அறந்தாங்கி), டி.சரத்குமார் (தாம்பரம்), என்.மரிய வில்சன் (ஆர்.கே. நகர்), விக்னேஷ்.கே (கிணத்துக்கடவு) ஆகிய 23 எம்எல்ஏக்களும் அமைச்சர்களாகப் பதவியேற்றனர். அவர்களுக்கு ஆளுநர் அர்லேகர் பதவிப் பிரமாணமும், ரகசியக் காப்பு பிரமாணமும் செய்து வைத்தார்.தொடர்ந்து நேற்று மாலை ஐயூஎம்எல் கட்சியும், விடுதலை சிறுத்தைகள் கட்சியும் தவெக அமைச்சரவையில் இடம்பெறுவதாக அறிவித்தது. இதனையடுத்து இன்று இந்த பதவிப் பிரமாண நிகழ்ச்சி நடந்தது. தவெக கூட்டணியில் காங்கிரஸ் இரண்டு, விசிக, ஐயூஎம்எல் அமைச்சர்கள் தலா ஒருவர் இடம்பெற்றுள்ளனர். ஆரம்பத்தில் நிபந்தனையற்ற ஆதரவை வெளியில் இருந்து வழங்கிய இந்த இரு கட்சிகளும் தற்போது ஆட்சியில் அதிகாரம் பெற்றிருக்கின்றன.
அதிமுகவிலிருந்து விலகி தவெகவுக்கு ஆதரவு கொடுத்த 25 எம்எல்ஏக்களுக்கு பதவி வழங்கக் கூடாது என்று இடதுசாரிகள், விசிக தொடர்ந்து வலியுறுத்தி வந்தன. இந்நிலையில் அந்த 25 பேருக்கும் அமைச்சரவையில் இதுவரை இடமளிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. தமிழக சட்டப்பேரவை பொதுத் தேர்தலில் விஜய் தலைமையிலான தவெக 108 இடங்களில் வெற்றி பெற்று தனிப்பெரும் கட்சியாக ஆட்சியமைக்க உரிமை கோரியது. ஆட்சியமைக்கத் தேவையான 118 இடங்களுக்காக, காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், விசிக, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் (ஐயூஎம்எல்) ஆகிய கட்சிகளின் ஆதரவைப் பெற்றது. முதல்வராக விஜய் கடந்த 10ம் தேதி பொறுப்பேற்றார். அவருடன், என்.ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, அருண்ராஜ், செங்கோட்டையன், வெங்கடரமணன், நிர்மல்குமார், ராஜ்மோகன், பிரபு, கீர்த்தனா ஆகிய 9 பேரும் அமைச்சர்களாகப் பதவியேற்றனர். அவர்களுக்கு ஆளுநர் ஆர்.வி.அர்லேகர் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.விஜய் தலைமையிலான அமைச்சரவையில், காங்கிரஸ் கட்சியின் ராஜேஷ்குமார், விஸ்வநாதன் உட்பட 23 புதிய அமைச்சர்களுக்கு ஆளுநர் ஆர்.வி.அர்லேகர் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். இதன் மூலம் 59 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழக அமைச்சரவையில் காங்கிரஸ் இடம்பெற்றது. இன்று விசிக, ஐயூஎம்எல் எம்எல்ஏக்கள் அமைச்சர்களாகியுள்ளனர். இதுவும் தமிழக அரசியல் வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்ததாகவே பார்க்கப்படுகிறது.

# "கூட்டணி ஆட்சி அமையவே முடியாது என்ற பேச்சுக்களுக்கு காங்கிரஸ் விடை கொடுத்திருக்கிறது" அமைச்சர் விஸ்வநாதன்

சென்னை:மே,23-

கூட்டணி ஆட்சி அமையவே முடியாது என்ற பேச்சுக்களுக்கு எல்லாம் காங்கிரஸ் விடை கொடுத்திருக்கிறது என உயர்கல்வி அமைச்சர் பி.விஸ்வநாதன் தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, "தமிழகத்தில் காமராஜரின் ஆட்சியை காங்கிரஸ் கட்சி கொண்டுவர வேண்டும் என்பது எங்கள் கனவு. அந்தக் கனவு இந்திரா காந்தி மற்றும் ராஜீவ் காந்தி காலத்தில் நடைபெற முடியாமல் போனது. சோனியா காந்தி பலமுறை முயற்சித்தும் நடைபெற



முடியாமல் போனது. ஆனால் ராகுல் காந்தி மக்களின் நம்பிக்கையை ஏற்று ஒரு கூட்டணி அமைச்சரவையை அமைத்துள்ளார்.ராகுல் காந்திக்கு மனமார்ந்த வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம். அமைச்சர் பதவியை வழங்கிய முதல்வர் விஜய்க்கும், கட்சிக்கும் எங்கள் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். ஜனநாயகத்தின் மாற்று அரசியலை மக்கள் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். கூட்டணி ஆட்சி அமையவே முடியாது என்ற பேச்சுக்களுக்கு எல்லாம் காங்கிரஸ் விடை கொடுத்திருக்கிறது. காங்கிரஸ் அமைச்சர்கள் இருவரும் லஞ்சம், லாவண்யம் இல்லாமல் செயல்படுகிறார்கள் என்ற பெயரை உருவாக்குவோம். அரசியலில் விமர்சனங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியது. கீழ்த்தரமான விமர்சனங்களை காங்கிரஸ் கட்சி புறம் தள்ளி மேல்நோக்கி நகர பாடுபடும்" இவ்வாறு அவர் பேசினார்.



# சீமான் கயல்விழி தம்பதிக்கு பெண் குழந்தை

சென்னை:மே,23-

நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கயல்விழி தம்பதியினருக்கு 2வதாக பெண் குழந்தை பிறந்துள்ளது.தமிழ் சினிமாவில் இயக்குநராக அறிமுகமாகி பின்னர் அரசியலுக்கு வந்தவர் சீமான். மறைந்த முன்னாள் சட்டப்பேரவை தலைவர் காளிமுத்துவின் மகள் கயல்விழிக்கும், சீமானுக்கும் கடந்த 2013ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது.இந்த தம்பதியினருக்கு திருமணமாகி 5 ஆண்டுகள் கழித்து, 2019 ஜனவரியில் ஆண் குழந்தை பிறந்தது. மாவீரன் பிரபாகரன் என அக்குழந்தைக்கு பெயரிட்டனர்.
இந்நிலையில்,தற்போது மீண்டும் 7 ஆண்டு இடைவெளிக்கு பிறகு, சீமான் கயல்விழி தம்பதியினருக்கு நேற்று 2வதாக பெண் குழந்தை பிறந்துள்ளது. தாயும், குழந்தையும் ஆரோக்கியத்துடன் நலமாக இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

# காங்கோவில் எபோலா வைரஸ் பரவல் காரணமாக இந்தியா ஆப்பிரிக்க ஒன்றிய உச்சி மாநாடு ஒத்திவைப்பு

புதுடெல்லி:மே,23-

இந்தியா, ஆப்பிரிக்க ஒன்றியம் ஆகிய இரு தரப்பும் இணைந்து 4வது இந்தியாஆப்பிரிக்கா உச்சி மாநாட்டை டெல்லியில் மே 28ம் தேதி முதல் நடத்துவதற்குத் தயாராகி வந்தன. இந்நிலையில், ஆப்பிரிக்காவின் பல பகுதிகளில் கொடிய எபோலா வைரஸ் பாதிப்புகள் பதிவாகியுள்ளன.குறிப்பாக, காங்கோ ஜனநாயகக் குடியரசில் 'பண்டிபுகியோ' என்ற அரிய வகை எபோலா வைரஸ் பரவி வருகிறது. அங்கு இதுவரை 130க்கும்




மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இதையடுத்து, உலக சுகாதார அமைப்பு சர்வதேச சுகாதார அவசர நிலையை அறிவித்துள்ளது. இதன் காரணமாக, இந்தியா ஆப்பிரிக்கா அமைப்பின் உச்சி மாநாடு காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ஆப்பிரிக்க ஒன்றியத் தலைவர்களுடன் கலந்தாலோசித்து இந்த முடிவை இந்திய அரசு எடுத்துள்ளது. இந்தியாவில் இதுவரை எபோலா பாதிப்பு எதுவும் கண்டறியப்படவில்லை. இருப்பினும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக விமான நிலையக் கண்காணிப்பு, பரிசோதனைகள் மற்றும் தனிமைப்படுத்துதல் நெறிமுறைகளைத் தீவிரப்படுத்துமாறு அனைத்து மாநிலங்களுக்கும் மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. மாநாட்டுக்கான புதிய தேதிகள் பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தவெக ஆட்சி அமைந்த பிறகு பல்வேறு துறைகளில் விடப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட குறுகிய கால டெண்டர்கள் ரத்து

சென்னை:மே,23-

தவெக ஆட்சி அமைந்த பிறகு பல்வேறு துறைகளில் விடப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட குறுகிய கால டெண்டர்கள் ரத்து செய்யப்பட்டது. மே 13 முதல் மே 22ம் தேதி வரை நகரப்புற வளர்ச்சி, ஊரக வளர்ச்சி, போக்குவரத்து



ஆகிய துறைகள் சார்ந்து வெளியான குறுகிய கால டெண்டர்கள், நிர்வாக காரணங்களுக்காக ரத்து செய்யப்பட்டுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது

# உ.பி.யை வாட்டி வதைக்கும் வெப்ப அலை: ரெட் அலர்ட் விடுத்த வானிலை ஆய்வு மையம்

புதுடெல்லி:மே,23-

உத்தரப் பிரதேசத்தில் உள்ள 10 மாவட்டங்களுக்கு வானிலை ஆய்வு மையம் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. இதன்மூலம், வெப்ப அலை சூழல் இரண்டு நாட்களுக்கும் மேலாக நீடிக்கும் என அறிவுறுத்தியுள்ளது. இது தொடர்பாக லக்னோ வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், "உத்தரப்பிரதேசத்தின் பண்டா, சித்ரகூட், கவுசாம்பி, பிரயாக்ராஜ், ஃபதேபூர், பிரதாப்கர், மிர்சாபூர், வாரணாசி, பதோஹி, ஜான்பூர் ஆகிய 10 மாவட்டங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கும் மேலாக தொடர்ந்து வெப்ப அலை வீசக்கூடும்.



கடுமையான முதல் மிகக் கடுமையான வெப்ப அலை நிலவும். இது பொது சுகாதாரத்துக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடும்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.மேலும், பாக்பத், மீரட், காஜியாபாத், ஹப்பூர், கவுதம் புத்த நகர், பலந்த்ஷஹர், அலிகார், மதுரா, ஆக்ரா உள்ளிட்ட 34 மாவட்டங்களுக்கு ஆரஞ்சு எச்சரிக்கையை விடுத்துள்ள லக்னோ வானிலை ஆய்வு மையம், தேவரியா, லக்கிம்பூர் கேரி, சீதாபூர், ஹர்தோய், ஃபருக்காபாத், லக்னோ, பாரபங்கி, அயோத்தி உள்ளிட்ட 17 மாவட்டங்களுக்கு மஞ்சள் எச்சரிக்கையை விடுத்துள்ளது. உத்தரப்பிரதேசம் முழுவதும் நேற்று தீவிர வெப்ப அலை வீசியது. பாண்டா மாவட்டத்தில் அதிகபட்சமாக 47.6 குசி ஆக பதிவான வெப்பநிலை, பிரயக்ராஜ் நகரில் 46.6 குசி ஆகவும், வாரணாசியில் 45.6 குசி ஆகவும் பதிவாகியது. அடுத்த 48 மணி நேரத்தில் அதிகபட்ச வெப்பநிலை படிப்படியாக 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை உயரக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதனிடையே, வெப்பம் தொடர்பான நோய்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை உறுதிசெய்யவும், அனைத்து துறைகளையும் முழு எச்சரிக்கையுடன் இருக்குமாறும் முதல்வர் யோகி ஆதித்யநாத் உத்தரவிட்டுள்ளார். மேலும், மாவட்ட நிர்வாகங்கள், மருத்துவமனைகள், மின்சாரம், நிவாரணத் துறைகள் போதுமான அளவு மருந்துகள், படுக்கைகள், 24 மணி நேர ஆம்புலன்ஸ் சேவைகள் ஆகியவற்றை தயார் நிலையில் வைத்திருக்கவும் அவர் அறிவுறுத்தியுள்ளார். அதோடு, தீ விபத்துகளுக்கு எதிரான தயார் நிலையை உறுதி செய்யவும் அவர் அறிவுறுத்தியுள்ளார். அதிகரிக்கும் கதிர்வீச்சு வெப்பம், வெப்பமான, வறண்ட மேற்குக் காற்று ஆகியவையே தற்போது நிலவும் கடுமையான வானிலைக்குக் காரணம் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# எழும்பூர் ரயில் நிலையத்தில் நவீன பல அடுக்கு வாகன நிறுத்தம் வசதி தொடக்கம்



சென்னை:மே,23-

எழும்பூர் ரயில் நிலையத்தில் நவீன பல அடுக்கு வாகன நிறுத்துமிட வசதி தொடங்கப்பட்டுள்ளது. இதன்மூலம், போக்குவரத்து நெரிசலை குறைக்கவும், பயணிகளின் வசதிகளை மேம்படுத்தவும் முடியும் என, சென்னை ரயில்வே கோட்ட அதிகாரிகள் தெரிவித்தனர். தமிழகத்தில் முக்கிய ரயில் நிலையங்களில் ஒன்றாக எழும்பூர் ரயில் நிலையம் திகழ்கிறது. நூற்றாண்டை கடந்த இந்த ரயில் நிலையத்தில் அடுத்த 50 ஆண்டுகளில் ரயில்கள் இயக்கம், பயணிகள் வருகை உள்ளிட்டவற்றை கருத்தில் கொண்டு, மறுசீரமைப்பு பணி ரூ.842 கோடியில் கடந்த 2024ம் ஆண்டு பிப்ரவரியில் தொடங்கப்பட்டது.முதல்கட்டமாக, ரயில் நிலையத்தின் உட்பகுதிகளில் நடைமேம்பாலம், நடைமேடை விரிவாக்கம், மேற்கூரை சீரமைப்பு உள்ளிட்ட பணிகள் முழு வீச்சில் நடைபெறுகின்றன.இந்த மேம்பாட்டு பணியின் ஒரு பகுதியாக, காந்தி இர்வின் சாலைப் பகுதியில் அதிநவீன பல அடுக்கு வாகன நிறுத்துமிடம் வசதி பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.இக்கட்டிடத்தின், 2வது மற்றும் 3வது தளங்கள் தலா, 3,442.13 சதுர மீட்டர் பரப்பளவைக் கொண்டுள்ளன. இந்த இரண்டு தளங்களிலும் சேர்த்து மொத்தம் 122 நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் 68 இருசக்கர வாகனங்களை நிறுத்த முடியும்.மேலும், 2,842.13 சதுர மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ள 4வது தளம், 62 நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் 34 இருசக்கர வாகனங்களும் நிறுத்த முடியும். இந்த வசதியினால் சாலை ஓரங்களில் வாகனங்கள் நிறுத்தப்படுவது குறைக்கப்பட்டு, நிலையத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் போக்குவரத்து தடையின்றி செல்ல முடியும்.இந்த நவீன வாகன நிறுத்துமிடத்தில் 22 மின்சார வாகன சார்ஜிங் நிலையங்கள், 24 மணி நேரமும் கண்காணிக்கும் 'சிசிடிவி' கேமரா, தீயணைப்பு பாதுகாப்பு உட்பட பல்வேறு சிறப்பம்சங்கள் இடம் பெற்றுள்ளன.பயணிகளின் வசதிக்காகக் கட்டணக் கழிப்பிடங்கள், ஓட்டுநர்களுக்கான ஓய்வறைகள், ஸ்மார்ட் லாக்கர் வசதிகள் உள்ளிட்டவை இடம் பெற்றுள்ளன.இதேபோல, மற்றொரு பல அடுக்கு வாகன நிறுத்துமிடம் பூந்தமல்லி நெடுஞ்சாலைப் பக்கத்திலும் தயாராகி வருகிறது. இது முழுமையடையும் போது சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தின் வாகன நிறுத்துமிடத் திறன் பலமடங்கு அதிகரிக்கும் என, சென்னை ரயில்வே கோட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

# முன்னாள் ஐஏஎஸ் அதிகாரி சாந்தஷீலா நாயர் நடத்தி வரும் 'எபிக்' மையத்தை பார்வையிட்டு பாராட்டிய ஐஐடி இயக்குநர்



சென்னை:மே,23-

சூரியஒளி மின்சாரத்தை பயன்படுத்துவதில் முன்மாதிரியாக திகழ்ந்து, மகளிர் குழுக்களுக்கு தொழில் பயிற்சி வழங்கி வரும் முன்னாள் ஐஏஎஸ் அதிகாரி சாந்தஷீலா நாயரின் எபிக் மையத்தை, ஐஐடி இயக்குநர் காமகோடி பார்வையிட்டு பாராட்டினார்.தமிழகத்தில் எம்ஜிஆர், ஜெயலலிதா, மு.கருணாநிதி ஆகிய 3 ஆளுமைகள் முதல்வர்களாக இருந்தபோது, அவர்களுடன் பணியாற்றி ஓய்வு பெற்றவர் சாந்தஷீலா நாயர்.இவர், சோழிங்கநல்லூர் அடுத்த படூர் பகுதியில், தனது தந்தை வாங்கி வைத்திருந்த 33 சென்ட் பொட்டல் காட்டை சீரமைத்து, கடந்த 2021ம் ஆண்டு எபிக் மையமாக (Eco Park Information Centre – EPIC) உருவாக்கினார்.அங்கு, அப்பகுதி மகளிர் குழுக்களுக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மழைநீர் சேகரிப்பு, இயற்கை உரம் தயாரிப்பு, இயற்கை வேளாண்மை உள்ளிட்டவை குறித்து களப் பயிற்சி வழங்கி வருகிறார். அங்கு பல்வேறு தாவரங்களை இயற்கை முறையில் வளர்த்து, ஒரு மரகத சோலையாக மாற்றி உள்ளார். இதனால், இந்த பகுதி ரம்மியமாக காட்சியளித்து வருகிறது. மேலும், பள்ளி மாணவ, மாணவியரின் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மையமாகவும் அது விளங்கி வருகிறது.இந்த மையத்தில் அடுத்த முன்னெடுப்பாக, சூரிய ஒளி மின்சார பயன்பாட்டில் முன்மாதிரி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். அதன்படி, அங்கு சோலார் மின் விளக்கு, வேளாண் பொருட்களை சூரிய ஒளியில் உலர்த்தும் இயந்திரம், குடிநீரை கொதிக்க வைக்கும் இயந்திரம் உள்ளிட்டவை பயன்படுத்தப்பட்டு வருகிறது.மேலும், சுமார் 5 கே.வி. திறன் கொண்ட சூரிய ஒளி பலகையும் அமைத்து, மின் வாரிய பவர் கிரிட்உடன் இணைத்துள்ளார். இந்த சூரிய ஒளி பலகை தயாரிக்கும் மின்சாரம் உடனுக்குடன் கிரிட்டுக்கு போய் விடும்.அதன் பிறகு, இவர்களின் தேவைக்கு கிரிட்டிலிருந்து மின்சாரத்தை, அங்கு நடைபெறும் பயிற்சிகளுக்கு எடுத்து பயன்படுத்துகின்றனர். இதில் இவர்கள் உற்பத்தி செய்யும் மின்சாரத்தை விட, பயன்படுத்தும் மின்சாரம் மிகவும் குறைவாக இருப்பதாக சாந்த ஷீலா நாயர் தெரிவித்தார்.இந்த மையத்தின் செயல்பாட்டை, சென்னை ஐஐடி இயக்குநர் காமகோடி, தமிழக அரசின் மகளிர் மேம்பாடு நிறுவன மேலாண் இயக்குநர் சஜீவனா ஆகியோர் நேற்றுமுன்தினம் பார்வையிட்டு, சாந்தஷீலா நாயரின் முன்னெடுப்பை பாராட்டினர்.அப்போது, படூர் கிராமத்தையும் சூரியஒளி மின்சாரத்தை பயன்படுத்துவதில் முன்மாதிரி கிராமமாக மாற்ற ஆலோசனை வழங்குமாறு, படூர் ஊராட்சி தலைவி தாரா சுதாகர் வேண்டுகோள் விடுத்தார்.

# ஏற்காட்டில் 49வது மலர்க்கண்காட்சி தொடக்கம்



சேலம்:மே,23-

ஏற்காட்டில் இன்று 49வது கோடை விழா மற்றும் மலர்க்கண்காட்சி தொடங்கி வருகிற 28ந் தேதி வரை 7 நாட்களுக்கு நடைபெறவுள்ளது.பல்லாயிரக்கணக்கான வண்ணமயமான நவீன அலங்கார மின் விளக்குகளால் நகரம் முழுமையாக அலங்கரிக்கப்பட்டு உள்ளது. ஏற்காடு நகரின் முக்கிய அடையாளங்களை கொண்ட அண்ணா பூங்கா, எரிச்சாலை, படகு இல்லம், ரோஜா தோட்டம் மற்றும் சேர்வராயன் கோவில் என அனைத்து பகுதிகளிலும் விதவிதமான எல்.இ.டி மற்றும் லேசர் வண்ண விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.இந்த விளக்குகள் அனைத்தும் இரவு நேரங்களில் ஒளிரவிடும்போது ஒட்டுமொத்த ஏற்காடு நகரமும், மலையும் ஒளி வெள்ளத்தில் மிதந்தது. லட்சக்கணக்கான வண்ண மலர்களைக் கொண்டு பிரமாண்டமான உருவ அமைப்புகளில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த மலர்க்கண்காட்சியின் அழகை நேரில் காண்பதற்காக தமிழகத்தில் உள்ள பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் மற்றும் கர்நாடக, கேரளா, ஆந்திரா மற்றும் புதுச்சேரி போன்ற அண்டை மாநிலங்களில் இருந்தும் ஏராளமான சுற்றுலா பயணிகள் குவிந்துள்ளனர்.இந்த 7 நாட்கள் தொடந்து நடைபெறும் கோடை விழாவில் சுற்றுலா பயணிகளையும் மற்றும் உள்ளூர் பொதுமக்களையும் கவரும் வகையில் தினந்தோறும் மாலையில் கலை நிகழ்ச்சிகள், நவீன நடனப்போட்டிகள், நாய் கண்காட்சி, சமையல் போட்டிகள், கோலப் போட்டிகள் என பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படஉள்ளன. மேலும், அரசின் பல்வேறு துறைகளின் சாதனை விளக்கக் கண்காட்சிகளும் விரிவான முறையில் அரங்குகள் அமைக்கப்பட்டு பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன

# இந்திய வெளியுறவு கொள்கைக்காக அமெரிக்கா வேறு என்ன திட்டங்களை வைத்துள்ளது? காங்கிரஸ்





புதுடெல்லி: மே,23-

வெனிசுலா அதிபர் அடுத்த வாரம் இந்தியாவுக்கு வர உள்ளதாக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ அறிவித்ததை சுட்டிக்காட்டியுள்ள காங்கிரஸ் கட்சி, இந்திய வெளியுறவுக் கொள்கைக்காக அமெரிக்கா வேறு என்னென்ன திட்டங்களை வைத்துள்ளது என்று கேள்வி எழுப்பியுள்ளது.இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகளின் கூட்டமைப்பான குவாட் அமைப்பின் வெளியுறவு அமைச்சர்கள் மாநாடு வரும் 26ம் தேதி புதுடெல்லியில் நடைபெற உள்ளது. இதில் பங்கேற்பதற்காக அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களுக்கு இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் அழைப்பு விடுத்துள்ளார். இந்த அழைப்பை ஏற்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ புதுடெல்லி வர உள்ளார்.இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய மார்கோ ரூபியோ, தனது பயணத்தின் முக்கியத்துவம் குறித்து விவரித்தார். மேலும், வெனிசுலாவின் செயல் அதிபர் டெல்சி ரோட்ரிக்ஸ் அடுத்த வாரம் இந்தியா வர இருப்பதாக நான் அறிகிறேன் என்றும் குறிப்பிட்டார்.வெனிசுலா செயல் அதிபர் டெல்சி ரோட்ரிக்ஸ் இந்தியா வர இருப்பது குறித்து இந்திய வெளியுறவு அமைச்சகம் இதுவரை அறிவிக்கவில்லை. வெனிசுலா அரசும் அறிவிக்கவில்லை. இந்நிலையில், அமெரிக்க வெளியுறவு அமைச்சர் அறிவித்திருப்பதை சுட்டிக்காட்டி காங்கிரஸ் கட்சி கேள்வி எழுப்பி உள்ளது.இது தொடர்பாக காங்கிரஸ் செய்தித் தொடர்பு பொதுச் செயலாளர் ஜெயராம் ரமேஷ் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "ஆபரேஷன் சிந்தூர் நிறுத்தப்படுவதாக கடந்த ஆண்டு மே 10ம் தேதி மாலை 5.37 மணிக்கு அறிவித்த முதல் நபர் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ. வெனிசுலா அதிபர் அடுத்த வாரம் இந்தியா வர இருப்பதாக நேற்று அறிவித்த முதல் நபரும் அவரேதான். இந்தியாவும் வெனிசுலாவும் இது குறித்து உறுதிப்படுத்தாத நிலையில் அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.அடுத்த வாரம் புதுடெல்லியில் நடைபெற இருந்த சர்வதேச அளவில் சக்திவாய்ந்த நாடுகளின் கூட்டமைப்பின் (International Big Cat Alliance) தொடக்க விழாவில் வெனிசுலா அதிபர் பங்கேற்பார் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும், ஆப்ரிக்காவில் எபோலா வைரஸ் பரவல் ஏற்பட்டதன் காரணமாக அந்த நிகழ்ச்சி தற்போது ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்திய வெளியுறவுக் கொள்கைக்காக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் வேறு என்ன திட்டங்களை வைத்துள்ளார்?" என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

# டெண்டர் முறைகேடு: மின் வாரிய அதிகாரிகள் 2 பேர் இடைநீக்கம்





சென்னை:மே,23-

டெண்டர் முறைகேடு காரணமாக மின்வாரிய அதிகாரிகள் 2 பேர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.இதுகுறித்து மின் வாரியம் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழ்நாடு மின்வாரிய தலைமை அலுவலகத்தில் எரிசக்தி வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல்குமார் தலைமையில் ஆய்வுக்கூட்டம் நடந்தது. அப்போது தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழகத்தின் சமீபத்திய டெண்டர் ஒதுக்கீடு மற்றும் ஒப்புதல் வழங்கியதில் வெளிப்படை தன்மை இல்லாமல், அவசரகதியில் ஒப்புதல்கள் வழங்கப்பட்டிருப்பது தெரியவந்தது.மேற்கண்ட குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் முறையான விசாரணை நடப்பதற்கு, தலைமை நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர் (வருவாய்) வி.காசி மற்றும் மரபுசாரா எரிசக்தி தலைமை பொறியாளர் பி.சந்திரசேகரன் ஆகியோர் தற்காலிக பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், மேற்கூறிய குற்றச்சாட்டுகளில் தொடர்புடைய ஓய்வுபெற்ற இயக்குநர் (தொழில்நுட்பம்) பசுமை எரிசக்தி கழகம் எஸ்.மங்களநாதனின் ஓய்வூதியப் பலன்கள் அனைத்தும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறைரீதியான முறையான விசாரணை நடைபெற்று மின்வாரிய விதிமுறைகளின்படி மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# புல்வாமா தாக்குதலில் மூளையாக செயல்பட்ட தீவிரவாதி ஹம்சா புர்ஹான் சுட்டுக் கொலை

புதுடெல்லி: மே,23-

புல்வாமா தாக்குதலில் மூளையாக செயல்பட்ட தீவிரவாதி ஹம்சா புர்ஹானை, பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் அடையாளம் தெரியாத நபர்கள் சுட்டுக் கொன்றனர்.ஜம்மு காஷ்மீரின் புல்வாமா மாவட்டத்தில் ஜம்மு ஸ்ரீநகர் நெடுஞ்சாலையில் கடந்த 2019ம் ஆண்டு சிஆர்பிஎப் வீரர்களை ஏற்றிச் சென்ற வாகனத்தின் மீது வெடிபொருட்களை ஏற்றி வந்த வாகனம் ஒன்று மோதி பயங்கரமாக வெடித்தது. இதில் 40 சிஆர்பிஎப் வீரர்கள் உயிரிழந்தனர். வெடிபொருட்கள் ஏற்றி வந்த வாகனத்தை எடுத்துச் சென்றது ஜெய்ஸ் இமுகமது என்ற தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த அடீல் அகமது தர் என்பது தெரியவந்தது.இந்த தாக்குதலுக்கு மூளையாக செயல்பட்டது புல்வாமா மாவட்டத்தின் கர்பத்போரா பகுதியைச் சேர்ந்த 23 வயது இளைஞர் ஹம்சா புர்ஹான் என தெரியவந்தது. இவர் அல் பத்ர் என்ற தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்தவர். இச்சம்பவத்துக்குப்பின் ஹம்சா புர்ஹான் பாக். ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதிக்கு தப்பிச் சென்றுவிட்டார்.இவரை சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்பு சட்டத்தின் (ஊபா) கீழ் தீவிரவாதியாக மத்திய அரசு கடந்த 2022ம் ஆண்டு அறிவித்தது. இந்நிலையில் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரின் முசாபராபாத் பகுதியில், ஹம்சா புர்ஹான் மீது அடையாளம் தெரியாத நபர்கள் துப்பாக்கி சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றனர். இதில் ஹம்சா புர்ஹான் இறந்தார்.



# ஆன்லைனில் போதை மாத்திரை வாங்கி விற்ற 3 இளைஞர்கள் கைது





ஈரோடு:மே,23-

ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் சுற்றுவட்டாரத்தில் ஆன்லைன் மூலம் சட்டவிரோதமாக போதை மாத்திரை வாங்கி விற்பனை செய்ய முயன்ற 3 இளைஞர்களை போலீசார் கைது செய்தனர். அவர்களிடம் இருந்து 100 போதை மாத்திரைகளை போலீசார் பறிமுதல் செய்தனர்.

கோபிச்செட்டிப்பாளையம் பகுதியில் உள்ள பாரியூர் சாலையில் 3 இளைஞர்கள் சந்தேகத்திற்கு இடமாக அப்பகுதியில் உலா வந்துள்ளார் அப்போது அவர்களிடம் கோபிச்செட்டிப்பாளையம் போலீசார் விசாரணை செய்தபோது அவர்களிடம் வலி நிவாரணி போதை மாத்திரை இருந்தது தெரியவந்துள்ளது.ஆன்லைனில் மருத்துவர்களின் பரிந்துரை இல்லாமல் வலி நிவாரணி மாத்திரைகளை ஆர்டர் செய்து அதனை கொரியர் மூலமாக கோபிச்செட்டிப்பாளையதில் உள்ள ஒரு தனியார் கொரியர் அலுவலகத்திற்கு வரவழைத்து அதிக விலைக்கு விற்பதாக கிடைத்த தகவலின் பேரில் போலீசார் சோதனை மேற்கொண்டனர்.

இதில் அத்தாணி பகுதியை சேர்ந்த பைன்டர் பாலாஜி, அந்தியூர் தாலுகா தவிட்டுப்பாளையத்தை சேர்ந்த கோபிநாத் மற்றும் தர்ஷன்ராஜ் ஆகிய மூன்று இளைஞர்களை போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். ஆன்லைன் மூலமாக வலி நிவாரணி மாத்திரைகளை வாங்கி அதனை போதைக்கு பயன் படுத்தியது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தொடந்து இது தொடர்பாக தனி படை அமைத்து போலீசார் விசாரிக்க திட்டமிட்டு வருவதாக அதிகாரிகள் தரப்பில் தகவல் கொடுத்துள்ளனர்

# தூத்துக்குடி ஸ்டெர்லைட் துப்பாக்கி சூடு சம்பவத்தின் 8ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி அனுசரிப்பு

தூத்துக்குடி:மே,23-

தூத்துக்குடி ஸ்டெர்லைட் போராட்டத்தின் போது நடந்த துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர்களின் உருவப் புகைப்படதிற்கு மெழுகுவத்தி ஏந்தி, மலர்கள் துவி, மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது. கடந்த 2018 ஆம் ஆண்டு மே 22ம் தேதி ஸ்டெர்லைடுக்கு எதிரான நடந்த போராட்டத்தில் 7 பேர் நடத்திய துப்பாக்கி சூட்டில் 13 பேர் உயிரிழந்தார் நூற்று கணக்கானோர் காயமடைந்தனர்.இந்த சம்பவத்தில் 8ஆம் ஆண்டு நினைவு தினம் இன்று அனுசரிக்கப்பட்டது. இதையொட்டி தூத்துக்குடி பாத்திமா நகர் தேவாலயம் சார்பில் அஞ்சலி செலுத்தப்பட்டது. இதில் ஏராளமானோர் கலந்துகொண்டனர். புதிதாக பொறுப்பு ஏற்றுள்ள அரசு இந்த துப்பாக்கி சூட்டிற்கு காரணமான காவல் துறை அதிகாரிகள் மீதும் மற்றும் வருவாய் துறை மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளனர்.மேலும் துப்பாக்கி சூட்டில் உயிரிழந்தவர்களின் நினைவாக மணிமண்டபம் அமைக்க வேண்டுமென கோரிக்கை வைத்துள்ளனர்

# தமிழகத்தில் 27ம் தேதி வரை கனமழை: சென்னை, புறநகரில் வெப்ப அலை வீசும்



சென்னை:மே,23-

தமிழகத்தில் சில மாவட்டங்களில் இன்று முதல் மே 27ம் தேதி வரை ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவும், சென்னை, புறநகரில் இன்று வெப்ப அலை வீசவும் வாய்ப்பு உள்ளது.இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: மத்திய வங்கக்கடல் பகுதிகளிலிருந்து தமிழகம் வரை தென்மேற்கு வங்கக்கடல் வழியாக சுமார் 3.1 கிமீ முதல் 4.5 கிமீ உயரத்தில் ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்தில் இன்று (மே 22) ஓரிரு இடங்களிலும், 23, 24 தேதிகளில் ஒருசில இடங்களிலும், 25 முதல் 27ம் தேதி வரை ஓரிரு இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.தமிழகத்தில் இன்று சேலம், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களிலும். 23ம் தேதி திருவண்ணாமலை, திருச்சி, சேலம், நாமக்கல், வேலூர், திருப்பத்தூர் மற்றும் தருமபுரி மாவட்டங்களிலும், 24ம் தேதி கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகள், நீலகிரி, வேலூர், ராணிப்பேட்டை மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களிலும். 25ம் தேதி கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகள், நீலகிரி, தேனி, ஈரோடு மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களிலும் ஓரிரு இடங்களில் இடி, மின்னல், பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும். 26ம் தேதி கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகள், நீலகிரி, தேனி, திண்டுக்கல், மதுரை, ஈரோடு, சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களிலும், 27ம் தேதி கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகள், நீலகிரி, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும். உள் தமிழக பகுதிகளில் இன்று முதல் 24ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை வழக்கமான அளவை ஒட்டியே இருக்கும். கடலோர தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் வழக்கத்தை விட 7 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக் கூடும்.சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் வெப்ப அலை வீசக்கூடும். மாலை அல்லது இரவு நேரங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 107 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 86 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.

18 இடங்களில் வெயில் சதம்: தமிழகத்தில் நேற்று அதிகபட்ச வெப்பநிலை அளவுகளின் படி அதிகபட்சமாக வேலூரில் 108 டிகிரி திருத்தணியில் 107 டிகிரி, சென்னை மீனம்பாக்கத்தில் 106 டிகிரி வெயில் பதிவானது.

ஈரோட்டில் 105 டிகிரி, திருச்சி, கரூர் பரமத்தி, மதுரை மாநகரம், சென்னை நுங்கம்பாக்கத்தில் தலா 104 டிகிரி, மதுரை விமான நிலையத்தில் 103 டிகிரி, தஞ்சாவூர், தருமபுரியில் தலா 102 டிகிரி, பாளையங்கோட்டை, நாமக்கல்லில் தலா 101 டிகிரி, திருப்பத்தூர், சேலம், புதுச்சேரி, பரங்கிப்பேட்டை, கடலூரில் 100 டிகிரி ஃபாரன்ஹீட் வெயில் பதிவாகியுள்ளது. இவ்வாறு வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டு உள்ளது.

# புளியங்குடியில் நகராட்சி அதிகாரிகள் அதிரடி! தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பைகள் பறிமுதல்; கடைகளுக்கு அபராதம்



புளியங்குடி,மே 23-
புளியங்குடி நகராட்சிப் பகுதி கடைகளில் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பைகள் பயன்படுத்தப்படுவதாக வந்த புகாரை அடுத்து, நகராட்சி ஆணையாளர் விஜயகுமார் உத்தரவின் பேரில் அதிரடி சோதனை நடத்தப்பட்டது.சுகாதார ஆய்வாளர் மாரிசாமி தலைமையில் நகராட்சி ஊழியர்கள், சுகாதார மேற்பார்வையாளர்கள் மற்றும் தூய்மை இந்தியா திட்டப் பணியாளர்கள் நகரின் முக்கியக் கடைகளில் ஆய்வு செய்தனர். இந்த ஆய்வில், விதிகளுக்குப் புறம்பாக வைக்கப்பட்டிருந்த 20 கிலோ பிளாஸ்டிக் பைகள் பறிமுதல் செய்யப்பட்டன. மேலும், பிளாஸ்டிக் பயன்படுத்திய கடை உரிமையாளர்களுக்கு 4,400 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டு நகராட்சி நிர்வாகத்தால் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

# வாசுதேவநல்லூரில் சோகம்: தம்பதி தற்கொலையால் தவிக்கும் 3 குழந்தைகளுக்குத் த.வெ.க நிதியுதவி



வாசுதேவநல்லூர் மே 23-
தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் புதுமந்தை 6 ஆம் தெருவைச் சேர்ந்த தம்பதியினர் ஆறுமுகசாமி மாரிச்செல்வி. கடந்த சில நாட்களுக்கு முன்பு ஏற்பட்ட குடும்பத் தகராறு காரணமாக இவர்கள் இருவரும் தற்கொலை செய்து கொண்டனர். இவர்களுக்கு இரண்டு பெண் குழந்தைகளும், ஒரு 6 மாத ஆண் குழந்தையும் உள்ளனர். இந்நிலையில், பெற்றோரை இழந்து தவிக்கும் அக்குழந்தைகளின் உறவினர்களைத் தென்காசி வடக்கு மாவட்டத் தமிழக வெற்றிக் கழகச் (த.வெ.க) செயலாளர் மாரியப்பன் மற்றும் கட்சி நிர்வாகிகள் நேரில் சந்தித்து தங்களது ஆழ்ந்த ஆறுதலைத் தெரிவித்தனர். மேலும், அக்குழந்தைகளின் எதிர்காலக் கல்விச் செலவிற்காகத் த.வெ.க சார்பில் நிதியுதவி வழங்கி ஆதரவளித்தனர்.சக்கரவியூகம் வாய்ஸ்: குடும்பத் தகராறால் மூன்று பச்சிளம் குழந்தைகளை அநாதையாக விட்டுச் சென்ற தம்பதியின் முடிவு வேதனையானது. எனினும், அக்குழந்தைகளின் கல்விச் செலவை ஏற்று, துயரக் களத்திற்கு நேரில் சென்று ஆறுதல் தந்துள்ள த.வெ.க மாவட்டச் செயலாளர் மாரியப்பன் மற்றும் நிர்வாகிகளின் இந்த மனிதநேயச் செயல் பாராட்டுக்குரியது!



■ மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன் குமார், மேலூர் வட்டம், தும்பைபட்டி கிராமத்தில் செயல்பட்டு வரும் மதுரை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட். சார்பிலான தொகுப்பு பால் குளிர்விப்பான் மையத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார். 5000 லிட்டர் கொள்ளளவு கொண்ட கி2652 தும்பைபட்டி தொகுப்பு பால் குளிர்விப்பான் மையத்தில் பால் சேகரிப்பு, தர பரிசோதனை, குளிர்விப்பு வசதிகள் மற்றும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வரும் சேவைகள் குறித்து கேட்டறிந்தார்.மேலும், தினசரி பால் வரத்து, பயன்பெறும் பால் உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை, பால் உற்பத்தியாளர்களுக்கு லிட்டருக்கு வழங்கப்படும் தொகை, கால்நடைகளுக்கு மேற்கொள்ளப்படும் தடுப்பூசி முகாம்கள், கால்நடை பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் மையத்தின் செயல்பாடுகள் குறித்து அலுவலர்களிடம் ஆய்வு மேற்கொண்டார்.



■ புதுச்சேரி மாநில உள்துறை மற்றும் கல்வித்துறை அமைச்சர் ஆ.நமச்சிவாயம், புதுடெல்லியில் மத்திய அமைச்சர் மன்சுக் எல். மாண்டவியா அவர்களை நேரில் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பின் போது புதுவை மாநிலத்தின் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, பாரதிய ஜனதா கட்சியின் அகில இந்திய அமைப்புப் பொதுச்செயலாளர் பி.எல். சந்தோஷ் ஜி அவர்களையும் அமைச்சர் ஆ.நமச்சிவாயம், புதுடெல்லியில் மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.



# பாலமேடு அரசு மருத்துவமனையில் த.வெ.க எம்எல்ஏ. கருப்பையா அதிரடி ஆய்வு!

அலங்காநல்லூர் மே 23-
மதுரை மாவட்டம் சோழவந்தான் தொகுதி த.வெ.க சட்டமன்ற உறுப்பினர் மூ.வி.கருப்பையா பாலமேடு பகுதியில் அதிரடி ஆய்வு மேற்கொண்டார். முதலில் பாலமேடு பேரூராட்சி அலுவலகம் சென்ற அவர், அங்கு தமிழக முதல்வர் சி.ஜோசப் விஜய் படம் உள்ளதா எனப் பார்வையிட்டார். தொடர்ந்து பேரூராட்சித் தலைவர் சுமதி பாண்டியராஜன் மற்றும் ஊழியர்களுடன் ஆலோசித்துவிட்டு, காவிரி கூட்டுக் குடிநீர்த் தொட்டி, பேருந்து நிலையம், பொதுக் கழிப்பிடம், சந்தைக் கூடம் ஆகியவற்றை ஆய்வு செய்து அடிப்படை வசதிகளை மேம்படுத்த உறுதியளித்தார்.
பின்னர், பாலமேடு அரசு மருத்துவமனைக்குச் சென்று தலைமை மருத்துவர் வளர்மதியிடம் மருந்து மாத்திரைகள் இருப்பு குறித்துக் கேட்டறிந்து, கட்டடங்களைப் பார்வையிட்டார். செய்தியாளர்களிடம் பேசிய அவர், "தளபதி விஜய் தலைமையில் 5 ஆண்டுகளில் முன்மாதிரி தமிழகம் உருவாக்கப்படும்; சோழவந்தான் தொகுதிச் சர்க்கரை ஆலை மீண்டும் இயக்கப்படும்" என்றார். இந்நிகழ்வில் த.வெ.க நிர்வாகிகள் பாலமேடு புகழ், தனசேகர், கிருஷ்ணமூர்த்தி, தியாகு, தாமு மற்றும் அரசு அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

# ஈரோடு அரசுப் பள்ளி மாணவிக்குக் கிடைத்த உலகளாவிய அங்கீகாரம்! ஜப்பான் "சகுரா சயின்ஸ்" சர்வதேச கல்வித் திட்டத்திற்குத் தேர்வு



சென்னை மே 23-
ஜப்பான் நாட்டின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் சார்பில் ஆண்டுதோறும் உலகளவில் "சகுரா சயின்ஸ் உயர்நிலைப்பள்ளி பரிமாற்ற திட்டம்" என்ற சர்வதேச கல்வி மற்றும் அறிவியல் பரிமாற்ற திட்டம் நடத்தப்பட்டு வருகிறது. இந்த மதிப்புமிக்க சர்வதேச அறிவியல் கல்வித் திட்டத்தில் பங்கேற்பதற்காகத் தமிழ்நாட்டைச் சேர்ந்த 4 அரசுப் பள்ளி மாணவ, மாணவிகள் மற்றும் 1 ஆசிரியர் ஆகியோர் ஜப்பான் நாட்டுக்குச் செல்லத் தேர்வாகியுள்ளனர். இதில் ஈரோடு மாவட்டம், கணபதிபாளையம் அரசுப் பள்ளி மாணவியும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. ஜப்பான் செல்ல உள்ள இந்த சாதனை மாணவச் செல்வங்களும் ஆசிரியரும், இன்று சென்னை தலைமைச் செயலகத்தில் பள்ளிக் கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. ராஜ்மோகன் அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.இந்நிகழ்வின் போது, பள்ளிக் கல்வித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மரு. சந்திரமோகன், இ.ஆ.ப., பள்ளிக் கல்வித்துறை இயக்குனர் முனைவர் ச. கண்ணப்பன் மற்றும் தொடக்கக்கல்வி இயக்குனர் முனைவர் பூ.ஆ. நரேஷ் ஆகியோர் உடனிருந்து மாணவர்களை ஊக்கப்படுத்தி வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டனர். அரசுப் பள்ளி மாணவி சர்வதேச அளவில் ஈரோடு மண்ணிற்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்திருப்பது ஒட்டுமொத்தத் தமிழகத்தையும் பெருமிதமடையச் செய்துள்ளது.



# அழகர் கோவில் சாலையில் ஆக்கிரமிப்பு! அலட்சியம் காட்டும் நெடுஞ்சாலைத்துறைக்குக் கண்டனம்

மதுரை மே 23-
மதுரை மாவட்டம் அழகர் கோவில் மெயின் ரோட்டில், அரும்பானூர் விளக்கிலிருந்து மாத்தூர் விளக்கு வரையில் உள்ள நடைபாதை பகுதிகளில், விதிகளை மீறி ஏராளமான சாலையோரக் கடைகள் அமைக்கப்பட்டு ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இதனால் பொதுமக்கள் மற்றும் பாதசாரிகள் மெயின் ரோட்டிலேயே நடந்து செல்ல வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளதுடன், அப்பகுதியில் கடுமையான போக்குவரத்து நெரிசலும், தொடர் விபத்துகளும் ஏற்பட்டு வருகின்றன. இந்த ஆபத்தான ஆக்கிரமிப்புக் கடைகளை நெடுஞ்சாலைத்துறையினர் உடனடியாக அகற்றி, சாலையைச் சீரமைக்க வேண்டும் என்று அப்பகுதி பொதுமக்களும், சமூக ஆர்வலர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். பொதுமக்களின் பாதுகாப்புக்காக ஒதுக்கப்படும் நடைபாதைகளைச் சாலையோரக் கடைகளாக மாற்றியிருப்பது அப்பட்டமான விதிமீறல். விபத்துகள் நடந்து உயிர்ச்சேதம் ஏற்படும் முன், மதுரை நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் உடனடியாகக் களத்தில் இறங்கி அரும்பானூர் மாத்தூர் விளக்கு அழகர் கோவில் சாலையின் ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் என்பதே பொதுமக்கள், சமூக ஆர்வலர்களின் அதிரடி கோரிக்கை.



# கைத்தறித் துறை அமைச்சர் விஜய் பாலாஜிக்கு வாழ்த்து! பாசூர் த.வெ.க செயலாளர் மு.ஞானசேகரன் நெகிழ்ச்சி

ஈரோடு - மே 23-
தமிழக அரசின் கைத்தறி, துணிநூல் மற்றும் கதர் கிராமத் தொழிலாளர் வாரியத் துறை அமைச்சராக ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் ம.விஜய் பாலாஜி அவர்கள் பொறுப்பேற்றுள்ளார். ஜவுளி நகரமான ஈரோட்டைச் சேர்ந்த ஒருவருக்கு இத்துறை ஒதுக்கப்பட்டுள்ளது பொதுமக்களிடமும், கட்சித் தொண்டர்களிடமும் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.இந்நிலையில், புதிய அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள ம.விஜய் பாலாஜி அவர்களுக்குத் தமிழக வெற்றிக் கழகத்தின் (த.வெ.க) பாசூர் பேரூராட்சிச் செயலாளர் மு.ஞானசேகரன் தனது சார்பாகவும், பாசூர் கழகத் தொண்டர்கள் சார்பாகவும் மனமார்ந்த வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொண்டுள்ளார்.



# "எடப்பாடியார் கரங்களை வலுப்படுத்துவோம்!" புதிய நிர்வாகிகள் நியமனம் குறித்து Ex.MP.சிவசாமி தலைமையில் தீவிர விவாதம்

உடுமலைப் பேட்டை மே 23-
அ.தி.மு.க பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியின் ஆணைக்கிணங்க, திருப்பூர் மாவட்டம் உடுமலை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட உழவர் சந்தை அருகில் உள்ள அண்ணா தொழிற்சங்க அலுவலகத்தில் அ.தி.மு.க ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. முன்னதாக, அண்ணா தொழிற்சங்க மாவட்டச் செயலாளர் துபாய் ஆறுமுகம், நகரக் கழக அவைத்தலைவர் சாமி (என்ற) சிவராஜ் முன்னிலையில், கழக நிறுவனர் எம்.ஜி.ஆர் சிலைக்கு மாலை அணிவித்து, கொடியேற்றப்பட்டது.
அ.தி.மு.க திருப்பூர் புறநகர் மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான திருப்பூர் சிவசாமி தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. உடுமலை நகர, மடத்துக்குளம் கழகப் பொறுப்பாளர்கள், கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் பொள்ளாச்சி தெற்கு ஒன்றியக் கழக நிர்வாகிகள் முன்னிலையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், கழக வளர்ச்சிப் பணிகளில் புதிய நிர்வாகிகளை நியமிப்பது குறித்தும், வரவிருக்கும் உள்ளாட்சித் தேர்தலில் அ.தி.மு.க நிர்வாகிகள் பெருவாரியாக வெற்றி பெற ஒருங்கிணைந்து செயல்படுவது குறித்தும் விவாதிக்கப்பட்டது.
மேலும், சோதனையான இந்த காலகட்டத்தில் அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்றி, எடப்பாடியார் தலைமையில் மீண்டும் தமிழகத்தில் ஆட்சி அமையப் பாடுபட வேண்டும் என மாவட்டச் செயலாளர் திருப்பூர் சிவசாமி சூளுரைத்தார்.

# முதன்முறையாக அமைச்சர் தொகுதியான ராஜபாளையம் ஜெகதீஸ்வரி பின்புலம் என்ன?

ராஜபாளையம்: மே 23-
ராஜபாளையம் தொகுதி தவெக எம்எல்ஏ ஜெகதீஸ்வரிக்கு அமைச்சர் பதவி வழங்கப்பட்டதன் மூலம், 64 ஆண்டு கால சட்டப்பேரவை தேர்தல் வரலாற்றில் ராஜபாளையம் முதன்முறையாக அமைச்சர் தொகுதி என்ற சிறப்பை பெற்றுள்ளது.ராஜபாளையம் சட்டப் பேரவை தொகுதி 1962ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. ஆனாலும் இதுவரை 16 தேர்தல்களை சந்தித்துள்ள ராஜபாளையம் தொகுதியில் வெற்றிபெற்று எம்எல்ஏவாக தேர்வு செய்யப்பட்ட எந்த உறுப்பினரும் அமைச்சராக இருந்தது இல்லை.இத்தொகுதியில் வெற்றி பெற்ற எம்எல்ஏ ஒருவர் முதன்முறையாக அமைச்சராக பதவியேற்றுள்ளதால், தொகுதிக்கு நிறைய திட்டங்கள் வரும் என தொகுதி மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். விஜய் ரசிகர் மன்றத்தில் இணைந்து பணியாற்றி வந்த ஜெகதீஸ்வரிக்கு, விஜய் மக்கள் இயக்கம் தொடங்கப்பட்டபோது நகர மகளிர் அணி செயலாளர் பதவியும், பின்பு மாவட்ட மகளிர் அணி செயலாளர் பொறுப்பும் வழங்கப்பட்டது.தமிழக வெற்றிக் கழகம் கட்சி தொடங்கப்பட்டபோது, ராஜபாளையம் தொகுதியை கொண்ட விருதுநகர் தென் மேற்கு மாவட்டச் செயலாளர் பொறுப்பு ஜெகதீஸ்வரிக்கு வழங்கப்பட்டது.தவெக பொதுச்செயலாளர் ஆனந்த் ஆதரவில் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு பெற்ற ஜெகதீஸ்வரி, அதே வழியில் அமைச்சர் பதவியும் பெற்றுள்ளதாக கூறப்படுகிறது.
அமைச்சராக பொறுப்பேற்றுள்ள ஜெகதீஸ்வரி ராஜபாளையம் தொகுதியின் நீண்டகால பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.ராஜபாளையம் பகுதியில் மாம்பழக் கூழ் தொழிற்சாலை, அரசு கலைக் கல்லூரி, வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்துக்கு சொந்தக் கட்டிடம், நகரின் குடிநீர் சேவையை பூர்த்தி செய்ய 6வது மைல் நீர்த்தேக்கம் அருகே உருவாக்கப்பட்ட கூடுதல் நீர்த்தேக்கத்தை சீரமைத்து முழுமையாக பயன்பாட்டுக்கு கொண்டுவருதல், கிடப்பில் போடப்பட்டுள்ள ரயில்வே சுரங்கப்பாதை பணிகள், தாமிரபரணி கூட்டுக்குடிநீர் திட்டம் மற்றும் பாதாள சாக்கடை திட்டத்தை முழுமையாக செயல்பாட்டுக்கு கொண்டுவர அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



■ தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், தமிழ்நாடுகேரளா எல்லை பகுதி புளியரை காவல் சோதனை சாவடியில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல் கிஷோர், இ.ஆ.ப., தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன் உள்ளார்.




SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000